# ந. சுப்புரெட்டியாரின் படைப்புகள் :
# கலையும் கருத்தியலும்



பதிப்பாசிரியர்கள்
**முனைவர் க. முருகேசன்**
**முனைவர் சு. இராமலிங்கம்**

# ந. சுப்புரெட்டியாரின் படைப்புகள் : கலையும் கருத்தியலும்

**(பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)**


| | | |
|---|---|---|
| பதிப்பாசிரியர்கள் | : | **முனைவர் க. முருகேசன்**<br>**முனைவர் சு. இராமலிங்கம்** |
| பதிப்புரிமை | : | பதிப்பாசிரியர்கள் |
| முதற்பதிப்பு | : | ஜுலை, 2016 |
| வெளியீடு | : | **தமிழ்த்துறை**<br>**கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி**<br>கோயம்புத்தூர் – 641029. |
| கணினி அச்சாக்கம் | : | **பிரடாக் பிரிண்ட்,**<br>476 பூமாதேவி கோவில் அருகில்<br>கவுண்டர் மில்ஸ் (அஞ்சல்)<br>கோயம்புத்தூர் – 29.<br>அலைபேசி : 98432 73994, 91505 91017 |
| பக்கங்கள் | : | XVI + 416 = 432 |
| விலை | : | உரூ. 350/- |

**ISBN : 978 - 81 - 932327 - 8 - 1**


# International Conference on Art and Ideology of Dr. N. Subbu Reddiar


| | | |
|---|---|---|
| Editor's | : | **Dr. K. Murugesan.**<br>**Dr. S. Ramalingam** |
| Copyright's | : | Editors |
| First Edition | : | July, 2016 |
| Published | : | **Department of Tamil**<br>**Kongunadu Arts and Science College**<br>Coimbatore - 641 029. |
| Computer Printing at | : | **Prdag Print**<br>476/1, Near Boomadevi Kovil<br>G.N. Mills (Po), Coimbatore - 29.<br>Cell : 98432 73994, 91505 91017 |
| Pages | : | XVI + 416 = 432 |
| Prize | : | **Rs. 350/-** |

45. **வா. காருண்யா** 228
இலக்கண இலக்கிய நெறிகளில் ந. சுப்புரெட்டியாரின் குயில்பாட்டு

46. **சி. செந்தில் வடிவு** 233
புரட்சிச் சிந்தனையும் புதுப் பார்வையும்

47. **அ. திலிப் ஏங்கல்ஸ்** 239
ந.சுப்புரெட்டியாரின் பார்வையில் கவிமணியின் திறனாயுந் திறன்

48. **கௌரி** 243
அருங்கலைக்கோனின் அறிவியல் நோக்கு

49. **முனைவர் இரா. ஜெகதீசன்** 248
தலைநாள் கொண்ட கோலங்கள்

50. **முனைவர் மு. நாகராஜன்** 252
ந.சுப்புரெட்டியார் பார்வையில் பட்டினத்தடிகள்

51. **மு. பாண்டிச்செல்வி** 257
பிரபந்தத்தில் ஆழ்வார்களின் பக்தி

52. **கீ.சு. தமிழரசி** 263
ந.சுப்புரெட்டியாரின் திறனாய்வுத் திறன்

53. **முனைவர் வி. வசுமதி** 267
ந.சுப்புரெட்டியாரின் பார்வையில் கவி(ன்)மணி

54. **முனைவர் செ. ஆறுச்சாமி** 272
ந. சுப்புரெட்டியார் பார்வையில் தமிழ் இலக்கியங்களில் அறிவியல்

55. **முனைவர் ந. இரஞ்சன்** 278
ந. சுப்புரெட்டியாரின் திணைமயக்கத்தில் மயக்கநிலை

56. **திருமதி. சு. பாத்திமா** 284
ந.சுப்புரெட்டியாரின் 'தமிழ்க்கடல் இராய.சொ.

57. **இர. ஜோதிமீனா** 290
வாழும் கவிஞர்கள் : ந. சுப்புரெட்டியார் பார்வை

58. **முனைவர் ம. கீதா** 295
ந. சுப்புரெட்டியாரின் தமிழ் இலக்கியங்களில் காட்டும் நீதி

59. **ஆ. நித்யா** 301
தொல்காப்பியம் காட்டும் திருமண முறைகளும் இல்லறவொழுக்கமும்

60. **முனைவர் க. பழனிவேல்** 307
பன்முக நோக்கில் 'என் அமெரிக்கப் பயணம்'

# 60. பன்முக நோக்கில் 'என் அமெரிக்கப் பயணம்'

முனைவர் க. பழனிவேல்
உதவிப்பேராசிரியர் மற்றும் தலைவர்
தமிழ்த்துறை (சுயநிதிப்புலம்)
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர் - 641 029.

## முன்னுரை

*"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்"* - *குறள். 620*

என்ற குறளுக்குத் தகையவாய் வாழ்ந்தோரில் குறிப்பிடத்தக்கவர் ந. சுப்புரெட்டியார் என்பதைத் தமிழுலகம் அறிந்து வைத்துள்ளது திண்மை. அண்ணார் பல்வேறு வகைப்பட்ட நூல்களைத் தமிழுலகிற்குத் தந்து சென்றிருப்பது தமிழர்கள் செய்த பேறாகும். அவர் ஒவ்வொன்றையும் அணுகுகின்ற பார்வை நுட்பமானது என்பதை அவரது நூல்கள் நமக்கு எடுத்துரைக்கின்றன. அவ்வகையில் அமெரிக்கா இன்று உலக அரங்கில் மதிப்புமிக்க நாடாக விளங்கிவரும் வேளையில், அங்குச் சுற்றுலா சென்று வந்த தமது அனுபவத்தை எழுத்து வழியாக அவர் பகிர்ந்து கொண்டுள்ள விதமும், கையாண்டுள்ள உத்திமுறைகளும், எடுத்துரைப்புக்கான காரண - காரியங்களும் "என் அமெரிக்கப் பயணம்" என்ற இந்நூலைக் கட்டுரைக்கான களமாக்கத் தூண்டின.

## கவன ஈர்ப்பு

நூலின் தொடக்கத்திலேயே குறிப்பிடத்தக்க நிழற்படங்களையும், அவை சார்ந்த குறிப்புகளையும் கொடுத்துப் படிக்கின்ற வாசகர் மனத்தை ஈர்த்து விடுகிறார். மேலும் நூலின் உட்பகுதியில் சில இடங்கள் குறித்து விளக்கிச் செல்லுமிடத்தும் முகப்பில் கொடுக்கப்பட்டுள்ள நிழற்படங்களைக் கண்டறிய குறிப்புகளை அளித்து படிப்போரது ஆர்வத்தைத் தூண்டி விடுகிறார். அவ்வாறு நூலைப் படிக்கும் வாசகனிடத்து ஒரு நிழற்படத்தைச் சாதாரணமாகப் பார்த்தற்கும் பின்னர் அதுகுறித்து முழுமையான தகவல்களை அறிந்துகொண்டு அந்நிழற்படத்தைப் பார்ப்பதற்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளதை உணரும்படி செய்கிறார்.

சில ஆங்கில வார்த்தைகளைத் தமிழில் உரைத்துப் பின்னர் அடிக்குறிப்பில் அதற்கான ஆங்கில வார்த்தையைக் கொடுத்திருக்கும் முறை படிப்பவர்களிடத்து மயத்தைத் தணிப்பதோடு நூலோடு ஒன்றித் தொடர்ந்து வாசிக்க துணைசெய்கிறார்.